381

381

†

A. M. D. G.

399

16 DEC 1944

அன்பரின் அழைப்பு.

399

(திருமணித் தியானம்)

இரண்டாம் பதிப்பு

விலை அணா $1\frac{1}{2}$

✝

A. M. D. G.

அன்பரின் அழைப்பு

திருமணித் தியானம்

(From Father Joseph Mc Donnell S. J.'s
"The Holy Hour")

ஆக்கியோன்
சங். J. M. நிக்கொலாஸ் சுவாமிகள்
Bishop's House, :: TUTICORIN.

3924

இரண்டாம் பதிப்பு

264.1
15 DEC 1944

பிரசுரிப்பவர்:
A. V. D. பாக்கியம் பிள்ளை,
புத்தக வியாபாரி
தூத்துக்குடி & திருநெல்வேலி

Q6:4146

Imprimatur :

❖ FRANCISCUS TIBURTIUS, S. J.,

Ep. Tuticorinensis.

19th March, 1944
TUTICORIN,

Printed at the Rajan Electric Press, Madras

முக்கிய கவனிப்பு

1. முகவுரையை ஆற அமர வாசித்தல் வேண்டும். புள்ளியிட்ட இடங்களில் சற்று தாமதித்தல் வேண்டும். இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்ட சிந்தனைகள் யாவற்றையும் வாசித்து முடித்துவிட அவசியமில்லை. ஒவ்வொருவருடைய சக்திக்குத் தகுந்தாப்போல் யோசித்துப் பார்ப்பார்களாக.

2. எஞ்சிய நேரத்தில் திரு இருதயச்செப மாலை, திரு இருதயப் பிரார்த்தனை இவற்றைச் சொல்லலாம்.

Bishop's House,
Tuticorin.

J. M. நிக்கொலாஸ்.

6 DEC 1944
MADRAS

முகவுரை

"பெரிய வியாழக்கிழமையன்று இரவில் ஜெத்செமனித் தோட்டத்தில் நான் மரண அவஸ்தை அனுபவித்தேன். அச்சமயம் நான் பட்ட துயரத்தில் நீயும் வியாழக்கிழமை தோறும் இரவில் பங்கு பெறும்படி செய்வேன். மரண அவஸ்தையைவிட அதிகக் கொடிய துயரத்துக்கு நீ உள்ளாவாய். அது எவ்விதமென்று உனக்குப் புலப்படாது. அன்று நான் பரம பிதாவுக்குத் தாழ்ச்சியுடன் ஒப்புக்கொடுத்த செபத்தில் நீயும் என்னுடன் சேரும்படி நீ நடுச்சாமத்துக்கு முன் எழுந்திருந்து, முழந்தாளிட்டு சாஷ்டாங்கமாக விழுந்து ஒரு மணி நேரம் என்னுடன் விழித்திருப்பாய், சீஷர்கள் என்னைக் கைவிட்டபோது நான் அனுபவித்த துயரத்தில் நீயும் இவ்விதம் பங்கு பெற்று, ஒருவிதமாக அத்துயரத்தைத் தணிப்பாய்."

நமது நேச இரட்சகர் அர்ச். மர்கரீத் மரியம்மாளுக்குச் சொன்ன வசனங்களாகும்

இவைகள். ஆகையால் திருமணி ஆராதனை செய்யும் நல்வழக்கத்தைப் படிப்பித்தவர் நமது ஆண்டவரே. திரு மணி ஆராதனை செய்கையில்:—

1. பூங்காவனத்தில் கிறீஸ்துநாதர் அனுபவித்த மரணத்துக்கான துயரத்தில் நாம் பங்கு பெறுகிறோம்.

2. அச்சமயம் அவர் பிதாவுக்குச் சமர்ப்பித்த தாழ்ச்சி நிறை செபத்தில் அவருடன் நாமும் ஒன்றிக்கிறோம்.

3. அவருடைய சீஷர்கள் அவரைக் கைநெகிழ்ந்தபோது அவர் பட்ட துயரத்தில் நாமும் பங்கடைந்து அவர் பட்ட துயரத்தைத் தணிக்கிறோம்.

தேவனும் மனிதனுமான சேசுவின் துயரத்திலும் செபத்திலும் நாம் பங்கு பெறுவதும், அவரது துயரத்தைத் தணிக்கக் கூடியவர்களாயிருப்பதும் பெரிய பாக்கியமாகும். திருமணி ஆராதனையானது ஆண்டவருடைய மரண அவஸ்தையின்போது அவருடன்

துணையாக இருப்பதே யாகும். "என்னுடன் ஒரு மணி நேரம் விழித்திருக்க உங்களாற் கூடாமற் போயிற்றோ?" என்று நமது ஆண்டவர் தமது சீஷர்களைப் பார்த்து சொன்ன வசனங்களை, நல்ல கிறீஸ்துவர்கள் தங்களுக்கே கிறீஸ்துநாதர் சொல்வதாக நினைத்துக் கொள்வார்களாக.

"எனது நித்திய பிதாவின் கோபத்தைத் தணிக்கவும், பாவிகளுக்காக அவரிடம் மன்னிப்புக் கேட்கவும் நீ முழந்தாளிட்டு, சாஷ்டாங்கமாக விழுந்து ஒரு மணி நேரம் என்னுடன் விழித்திருப்பாய்"

ஆகையால் திரு மணி ஆராதனை செய்கையில் சர்வேசுரனுடைய கோபத்தைத் தணித்தல், பாவிகளுக்கு மன்னிப்பும் மனந்திரும்ப வரமும் கேட்டு மன்றாடுதல் ஆகிய இந்த இரண்டு கருத்துகளும் நம் கண் முன் இருக்க வேண்டும் என நமது ஆண்டவர் விரும்புகிறார். இவ்விரண்டையும் பற்றிச் சற்று பார்ப்போம்.

15 DEC 1944

அன்பின் அழைப்பு

திருமணித் தியானம்

தேவ கோபத்தைத் தணித்தல்

1. சர்வேசுரனுடைய கோபத்தை எழுப்புவது பாவமே. பாவமே அவருடைய பெரிய சத்துரு. பாவம் செய்கையில் பாவியானவன் சர்வேசுரனுக்கு விரோதமாக எழும்பி, அவரது சத்துருவான சாத்தானுடன் கூடி "உமக்குச் சேவை செய்யமாட்டேன்" என்கிறான். சர்வேசுரன் அவனை எதற்காக உண்டாக்கினார் என்பதைக் கவனியாதிருக்கிறான். அவருடைய சொற்படி நடக்க மறுக்கிறான்.

2. ஆகையால், சர்வேசுரனுடையகோபத்தைத் தணிக்க விரும்பினால்: முதலாவது, நாம் பாவத்தை விலக்கி வெறுக்கவேண்டும்.

இரண்டாவது, மற்றவர்களும் அதை விலக்கி வெறுக்க நம்மால் ஆனதையெல்லாம் செய்ய வேண்டும். மூன்றாவது, நம்முடையவும் மற்றவர்களுடையவும் பாவங்களுக்குப் பரிகாரம் செய்யவேண்டும்.

இம்மூன்று காரியங்களையும் சாதிப்பது எங்ஙனம்? முதலாவது, நமது பாவங்களுக்காக உண்மையான மனஸ்தாபப்பட்டு இனி யாவது அவைகளைச் செய்யாதபடி உறுதி யான தீர்மானம் செய்யவேண்டும். இரண்டாவது நமது செபம், நன்மொழிகள், முன் மாதிரிகையால் மற்றவர்களும் நல்ல சர்வேசுரனை நேசிக்கச் செய்யவேண்டும். மூன்றாவதாக, பழைய பாவங்களுக்குப் பரிகாரம் செய்யவேண்டும்.

சகல சிருஷ்டிகள்மீதும் சர்வேசுரனுக்குச் சர்வாதிகாரம் உண்டு. பாவஞ்செய்கிறவன் முதலாவது இச்சத்தியத்தை மறுக்கிறான்; இரண்டாவதாக சர்வேசுரனுடைய நன்மைத்தனத்தை அவன் ஏற்றுக்கொள்ளுகிறு

னில்லை; மூன்றாவது, சர்வேசுரன் இருக்கிறார் என்கிற சத்தியத்தையே அவன் மறுக்கிறான்; நான்காவது, சிருஷ்டிகளை வணங்குவதற்குப் பதிலாக தன்னையே வணங்குகிறான்.

பாவத்துக்குப் பரிகாரம் செய்கையில் நாம் :-

1. சகல சிருஷ்டிகள்மீதும் சர்வேசுரனுக்குச் சர்வாதிகாரம் உண்டென்பதை அங்கீகரிக்கிறோம். 'ஆண்டவரே, நான் உமது கரத்தால் உண்டாக்கப்பட்டவன்; என்னை உமது பிரியம்போல் நடத்துவீராக' என்று சொல்லி, எல்லாக் காரியங்களிலும் அவரது சித்தத்திற்குப் பணிந்து நடக்கிறோம்.

2. அவர் சகல நன்மைச் சொரூபி என்பதை அங்கீகரிக்கிறோம். அவர் சகல நன்மைச் சொரூபியாகையால், நமது முழு இருதயத்தோடும் அவரை நேசித்து அவருக்கு நன்றியுள்ளவர்களாக நடக்கிறோம். 'ஆண்டவரே, நீரே சகல நன்மைகளும் சம்பூரணமாய் நிறை

யப் பெற்றவர். சேசுவே, உம்மை நான் முழு இருதயத்தோடும் நேசிக்கிறேன்.'

3, அவருடைய மற்ற இலக்ஷணங்களையும் விசேஷமாக அவரது இரக்கம், நீதி, சர்வ வல்லமை இவற்றையும் அங்கீகரிக்கிறோம்.

4. சிருஷ்டிகரைத் திருப்திசெய்வதற்குப் பதிலாக நம்மை நாமே திருப்தி செய்து அவரை நோகப்பண்ணியதற்குப் பரிகாரமாக நம்மை நாமே அடக்கி ஒடுக்குகிறோம்.

பாவிகளுக்காகப் பொறுத்தல் கேட்டல்

அர்ச். மர்கரீத் மரியம்மாள் 1673-ம் வருடம்செய்த தியானத்தின்போது கிறீஸ்து நாதர் அவளுக்குத் தோன்றி, பாவிகளுக்காகப் பொறுத்தல் கேட்கும் விதத்தைக் கற்பித்தார். "உனது இருதயத்தையும் கரங்களையும் உயர்த்தி, உன்னையும் உனது ஜெபங்கள் நற்கிரியைகளையும், உலகத்தின் பாவங்களுக்குப் பரிகாரப் பலியாக எனது பிதாவுக்கு

இடைவிடாது ஒப்புக்கொடுப்பாயாக. அவருடைய நீதிக்கும் பாவிகளுக்கும் நடுவே என்னை மத்தியஸ்தனாக வைத்து அவரது இரக்கத்தைக் கெஞ்சிக் கேள். அப்பொழுது என்னுடைய இரக்கம் உன்னைச் சூழ்ந்திருப்பதாக நீ உணர்வாய். நானும் பாவிகளுக்கு உதவி செய்வேன். நான் காண்பித்துள்ள இரக்கத்துக்குப் பதில் நன்றியாக நீ எனது பிதாவுக்கு இருதய பூர்வமான நன்றி சொல்வாயாக.'

பாவிகளுக்காகச் சர்வேசுரனுடைய இரக்கத்தைக் கேட்கும் விதம் என்ன என்று நமது ஆண்டவரே வாய் திறந்து சொல்லியிருக்கிறார். பூசை நேரத்திலும் திவ்ய நற்கருணை சந்திக்கையிலும், நமது நேச ஆண்டவரையே, அவர் திருச் சரீரத்தையும் இரத்தத்தையும் ஆத்துமத்தையும் தேவ சுபாவத்தையும் அவருடைய உழைப்பையும் கொடிய பாடுகளையும் மரணத்தையும், இவ்வுலகத்திலிருக்கையில் அவர் நினைத்த நினைவுகளையும், செய்த செய்கைகளையும், பட்ட துன்ப வருத்தங்களையும்,

அவருடைய ஐந்து திருக்காயங்களையும் பேறு பலன்களையும், அவர் பிதாவுக்குச் செலுத்தின பரிகாரத்தையும் நாம் நித்திய பிதாவுக்கு ஒப்புக் கொடுக்கவேண்டும். நம்முடையவும் உலகத்தாருடையவும் பாவங்களுக்குப் பரிகாரம் செய்வதற்கானவற்றை நாம் நமது திவ்ய இரட்சகருடைய பொக்கிஷ சாலையிலிருந்தே எடுக்கவேண்டும்.

திருமணி ஆராதனை. ஆயத்தஜெபம்

பரலோகத்தையும், பூலோகத்தையும், படைத்த சிருஷ்டிகர் என் தேவன், என் கர்த்தர், அளவற்ற மகத்துவம் பொருந்திய கடவுள் இங்கு இருக்கிறார்........அவர் என்னைப் பார்க்கிறார்......

தூசியும் சாம்பலுமாகிய நான், நீசப்பாவியும் துரோகியுமான நான், என் கண்களை அவர்பால் உயர்த்த தகுதியுள்ளவனல்ல..... அப்படியிருந்தும் அவர் பட்சத்தோடு என்னைத் தம் சமுகத்துக்கு அழைக்கிறார்........

நம்பிக்கையுடன் நான் அவர் முன் செல்கிறேன்.

என் சர்வேசுரா, உமது பாதத்தடியில் நான் மிகுந்த தாழ்ச்சியுடன் சாஷ்டாங்கமாக விழுகிறேன். ஓ மகா பரிசுத்த திரித்துவமே, பரகதியில் உம்மை ஆராதிக்கும் சம்மனசுக்கள் அர்ச்சிய சிஷ்டவர்களுடன் சேர்ந்து நான் உம்மை ஆராதிக்கிறேன். என் இரட்சகராகிய சேசுவே, திவ்யசற்பிரசாதத்தில் வீற்றிருக்கும் உம்மை நான் ஆராதிக்கிறேன்.

என் சர்வேசுரா, உமக்கு முன்வர நான் பாத்திரவானல்ல. ஆனால் உமது அளவற்ற இரக்கத்தின்மீது நம்பிக்கை கொண்டு உம்மிடம் வருகிறேன். என் பாவங்களை மன்னித்து, என் நீசத்தனத்தைக் கவனியாது கிறீஸ்தாருடனும் அவருடைய பேறுபலன்களைப் பார்த்தும், என் ஆராதனையை ஏற்றுக்கொள்ளும்படி உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

என் சர்வேசுரா, இந்த மணி நேரத்தில் என் சரீரத்தை அதன் பஞ்சேந்திரியங்களுடன் ஆத்துமத்தை அதன் சகல தத்துவங்களுடன், இருதயத்தை அதன் சகல ஆசைகளுடன் உமது மகிமைக்காக உபயோகிப்பேனாக. என் புத்திக்குப் பிரகாசத்தையும் நேசத்துக்கு அக்கினியையும், மனதுக்குத் திடனையும் கட்டளையிட்டருளும். இனிமேலாக உம்மை அதிகமாக அறிந்து, நேசித்து அதிக பிரமாணிக்கத்துடன் சேவிப்பேனாக.

தேவ கோபத்தைத் தணித்து, பாவிகளுக்காக பொறுத்தல் கேட்பதே இந்த மணி நேரத்தில் என் முக்கிய நோக்கமாயிருக்கும்படி எனக்கு ஒத்தாசை புரியும்.

சேசுவே, என் இரட்சகரே, பூங்காவனத்தில் நீர் அனுபவித்த மரண அவஸ்தையைப் பற்றி நான் தியானிக்கப்போகும் இந்த மணி நேரத்தில் மற்ற நினைவுகள் என்னிடமிருந்து அகலக்கடவன.

மாமரியே, வியாகுலத் தாயே, உமது திருக் குமாரனுடைய மரண அவஸ்தையைப் பற்றி நான் சிந்திக்கையில் நீரும் என் அண்டையில் நின்று எனக்கு உதவி செய்வீராக.

திரு இருதயத்தின் சிநேகிதராகிய அர்ச். சூசையப்பரே, சேசுவின் துயரத்தைத் தணிக் கும் விதத்தை எனக்குப் படிப்பியும்.

ஜெத்செமனித் தோட்டத்தில் சேசுவுக்கு ஆறுதல் சொல்ல வந்த பரிசுத்த சம்மனசான வரே சகல சம்மனசுக்களே, அர்ச்சியசிஷ்ட வர்களே, எனக்கு உதவியாக வாருங்கள்.

முதற் கால் மணி

சேசுநாதர் உனக்கு முன்னால் நின்று "எனது ஆத்துமமானது மரணத்துக்கு ஏது வான துக்கம் கொண்டிருக்கிறது" என்று சொல்லுவதாக உருபிகரித்துக்கொள்.

இனிய சேசுவே, உமது துயரத்தின் மிகு தியை நான் அறிந்து உம்முடன் அனுதாபப் படக் கிருபை செய்தருளும்.

"பின்பு சேசுநாதர் அவர்களோடுகூட ஜெத்செமனி என்னப்பட்ட பூங்காவனத்துக்கு வந்து, தம்முடைய சீஷர்களை நோக்கி, நான் அங்கே போய்ச் செபம் பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி, இராயப்பரையும் செபதெயுவின் குமாரரிருவரையும் அழைத்துக்கொண்டு போய், துயரப்படவும் ஆயாசப்படவும் தொடங்கினர்."

தியானி : அவரது கொடிய மரண அவஸ்தை நேரத்தில் நாம் அவருடன் இருக்கவேண்டும் என்று சேசுநாதர் விரும்புகிறர்...அன்று இராயப்பரையும் இயாகப்பரையும் அருளப்பரையும் தனியாகக் கூட்டிச் சென்றதுபோல, இன்று நம்மையும் உலக சந்தடி அலுவல்களினின்று கூப்பிடுகிறர். சேசுநாதருடன் காவல் இருக்கக் கிடைப்பது எவ்வளவு பெரிய மகிமை! அந்தப் பயங்கரமான துயரம் நிறைந்த நேரத்தில் நாம் எவ்வளவு சந்தோஷத்துடன் அவருடன் தங்கியிருக்கவேண்டும்...

அவரது துயரத்தைக் கவனி...துயரப் படவும் ஆயாசப்படவும் தொடங்குகிறார். அவரது துயரத்தின் காரணங்கள் இரண்டு.

முதலாவது :-அவருக்கு வரவிருக்கும் வேதனைகளும் கொடிய மரணமும் அவர் கண்முன் தெளிவாகத் தோன்றுகின்றன. நீதியாசனங்களுக்குமுன் அவர் அடையவிருக்கும் நிந்தை அவமானங்கள்...கற்றூணிற் கட்டுண்டு அடிபடுவதாலும் முண் முடிசூட்டப்படுவதாலும் ஏற்படும் சகிக்கவொண்ணாத வேதனை... சிலுவை சுமந்து கல்வாரி ஏறிச்செல்லுவதினால் ஏற்படும் ஆயாசம்...கை கால்களில் ஆணிகள் அறைவதால் ஏற்படும் நோவு... சிலுவையில் கொடிய மரண அவஸ்தை... இவை யாவும் அவரது கண்முன் தோன்றின.

இரண்டாவது :—இக்குரூரக் காட்சியை விட அவரை அதிக துயரத்துக்குள்ளாக்கியது மனிதரது பாவங்களின் பயங்கரக் காட்சியே...பாவத்தின் நிழல்முதலாய் பட்டறியாத இரட்சகர், இதோ, தமது மேல் பாவச்

சுமை சுமத்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறார்... உலகம் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்து அதன் முடிவு வரை செய்யப்பட்டுள்ள, செய்யப் படவிருக்கும் கணக்கிலடங்காத, நல்ல மனி தர் பேர்முதலாய்ச் சொல்லக் கூச்சப்படும் பாவங்கள்-ஜலப்பிரளயத்தைக் கூவி யழைத்த பாவங்கள், சோதோம் கொமொரா பட்டணங்களின் வெட்கம் நிறை அக்கிரமங் கள், சர்வேசுரனை அறியாதவர்கள் செய்யும் சுபாவத்துக்கு விரோதமான துர்ச் செய்கை கள், அதைவிட அதிக வெட்கக்கேடான கிறீஸ்துவர்களின் அக்கிரம துரோகங்கள்... இவை யாவும் அவரது கண்முன் நின்றன... நின்று பேசு சேசுவைத் துக்கசாகரத்தில் அமிழ்த்தி இரத்தவியர்வை வியர்க்கச்செய் தன...

சோதித்துப்பார்: அன்று ஜெத்செமனித் தோட்டத்தில் எனது பாவங்களும்...இரட்ச கருடைய கண்முன் நின்றன. அவருடைய சொல்லொண்ணாத் துயரத்துக்கு நானும் காரணமாயிருந்தேன்...இப்பொழுது எனது

குற்றத்துக்குப் பரிகாரம் செய்யவேண்டும். ஆகையால் இத்திருமணி ஆராதனை நேரத்தில் பக்திநேசத்துடன் ஆண்டவருடன் விழித்திருந்து அவருடைய துயரத்தைத் தணிப்பேன்...

செபம்: ஆண்டவரே, பூங்காவனத்தில் அன்று நீர் மரண அவஸ்தை அனுபவிப்பதற்கு நானும் காரணமாயிருந்ததுபற்றி நான் வெகுவாகத் துக்கிக்கிறேன்...நித்திய பிதாவே, எனது பாவங்களுக்கும் மனிதருடைய பாவங்களுக்கும் பரிகாரமாக, கிறீஸ்து நாதருடைய அளவற்ற பேறுபலன்களையும், உழைப்பையும், பாடுகளின்போதும் மரணத்திலும் அவர் அனுபவித்த கொடிய வேதனைகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். உமது நேச குமாரனுடைய முகத்தைப் பார்த்து, பிதாவே, இரக்கமாயிரும்.

(மும்முறை)

முதலோதி: பொறுத்தருளும், கர்த்தாவே, உம்முடைய ஜனத்தின் பாவங்களைப் பொறுத்தருளும்.

எல்லோரும்: என்றென்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிராதேயும் சுவாமி.

மனஸ்தாப முயற்சி: என் சர்வேசுரா, நான் உமக்குக் கஸ்தி கொடுத்ததற்காக மிகவும் துக்கிக்கிறேன். ஏனெனில், எனது பாவத்தால் மோட்சத்தை இழந்தேன்; நரக தண்டனைகளுக்கு நான் பயப்படுகிறேன். விசேஷமாக அப்பாவங்கள், என் சர்வேசுரா, மிகவும் நல்லவரும் எனது நேசத்துக்கு முற்றிலும் உரியவருமான உம்மை மனம் நோகப் பண்ணியிருக்கின்றன. உமது வரப்பிரசாதத்தினுதவியால் அவைகளுக்குப் பரிகாரம் செய்து, இனிமேலாகப் புது சீவியம் துவக்குவேன்.

இரண்டாம் பிரிவு

"என் ஆத்துமமானது மரணமட்டும் துக்கமாயிருக்கிறது."

தியானி: ஆண்டவருடைய இருதயத்தில் கொடிய துயரம் நிறைந்திருக்கிறது...தமது சீஷர்களிடம் வந்து ஆறுதல் தேடுகிறார்... சிருஷ்டிகர் தமது சிருஷ்டிகளிடம் ஆறுதல் தேடுகிறார்...நமது சிருஷ்டிகருக்கு நாம் ஆறு

தல் கொடுக்கக்கூடும்! நமது பாக்கியமே பாக்கியம்! இங்கு கூடியிருக்கும் நம்மைப் பார்த்து அவர் அதே வார்த்தைகளைச் சொல்லுகிறார். கவனித்துக்கேள்! 'மகனே, மகளே, என் ஆத்துமமானது மரணமட்டும் துக்கமாயிருக்கிறது. எனக்கு ஆறுதல் கொடுப்பாயாக...'

சோதித்துப்பார் : நமக்கும் துன்ப துயரங்கள் வருகின்றன... அந்நேரங்களில் சஞ்சலமானது நம்மை மேற்கொள்ளுகிறது. யாவும் பிரதிகூலமாய் முடிவனபோல் தோன்றுகிறது. வருங்காலத்தில் முதலாய் நம்பிக்கையின் அறிகுறிகள் இருப்பதாகத் தெரிவதில்லை. அச்சந்தர்ப்பங்களில் சேசுவின் மரணத்துக்கு ஏதுவாயிருந்த அத்துயரத்தைப் பற்றி நினைப்போமாக...நமது துயரத்தை அவரது துயரத்தோடு ஒன்றிப்போமாக.

செபம் : நல்ல ஆண்டவரே, துயரப்படுகையில் நானும் உம்முடன் தங்கியிருக்க ஆசிக்கிறேன். எனக்கு வரும் துயரங்களை உம் துய

ரத்துடன் ஒன்றிக்கிறேன். உமது நேசத்திற்காக அவைகளைப் பொறுமையுடன் அனுபவிக்கும் விதத்தை எனக்குக் கற்பிப்பீராக.

சிநேகம் நிறை ஆண்டவரே, சிற்றின்ப சந்தோஷங்களிலும், உலகின் நிலையற்ற காரியங்களிலும் உழன்று, பாவச் சகதியில் புரண்டு திரியும் ஆயிரக்கணக்கான ஆத்துமங்கள்மேல் பழிவாங்க உமது நீதியின் கரத்தை நீட்டாதேயும். அவ்வாத்துமாங்களை உமது இரத்தத்தால் சுத்திகரித்து, அவர்களை மன்னித்துக் காப்பாற்றத் தயை புரியும்.

முதலோதி:—தங்கள் வாலிப வயதையும், நேரத்தையும் சிற்றின்ப சந்தோஷங்களில் செலவழிக்கும் சாலர் மேலும்,

துணைவர் : இரக்கமாயிரும், என்சேசுவே, இரக்கமாயிரும்.

முத : பகிரங்கமாக பாவ அக்கிரமங்களையே தொழிலாகக் கொண்டு, தங்கள் மனச்சாட்சியை விபரீதப் படுத்தி நல்லொ

முக்கத்துக்கு விரோதமாக நடப்பவர்கள் மேல்,

துணை : இரக்கமாயிரும், என் சேசுவே இரக்கமாயிரும்.

முத : பணத்தாலும் கெட்ட பிரசுரங்களாலும் ஆத்துமாக்களை நித்திய கேட்டுக்கு உள்ளாக்கப் பிரயாசப்படும் சகலர் மேலும்,

துணை : இரக்கமாயிரும், என் சேசுவே, இரக்கமாயிரும்

முத : ஆசாபாசங்களை எழுப்பக்கூடிய நாடக நடனங்களை தொழிலாகக் கொண்டிருப்பவர்கள்மேல்,

துணை : இரக்கமாயிரும், என் சேசுவே, இரக்கமாயிரும்.

முத : உமது திருச்சட்டங்களின் கருத்தை முற்றிலும் கண்டு பிடியாமல், துர்மாதிரிகைக்குரிய இன்ப சுகங்களிலும், மரியாதையற்ற நடையுடை பாவனைகளிலும், கெட்ட நாடகங்களிலும் தங்கள் வாழ்நாளைச் செல விடும்பாவிகள் மேல்,

துணை: இரக்கமாயிரும், என் சேசுவே, இரக்கமாயிரும்.

முத: உண்மையான கிறீஸ்துவ ஜீவியம் எதில் அடங்கியிருக்கிறதெனக் கண்டுபிடியாமலும், உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாக உள்ள சமுகக் கிளர்ச்சியில் உள்ள ஆபத்துகளை உணராமலும் இருக்கும் ஆத்துமங்கள் மேல்,

துணை: இரக்கமாயிரும், என் சேசுவே, இரக்கமாயிரும்.

முத: ஓ சேசுவே, துஷ்டர்களால் உமக்கு வரும் நிந்தைகளை தாங்கள் தடுக்கக்கூடியவர்களாயிருந்தும் தங்களின் கோழைத்தனத்தினுலும், உலகங் கவலைகளினுலும் அவ்விதம் செய்யத் தவறும் கிறிஸ்துவர்களின் மேலும்,

துணை: இரக்கமாயிரும், என் சேசுவே இரக்கமாயிரும்,

முறை: முத: பொறுத்தருளும் கர்த்தாவே.....

மூ: எல்: என்றென்றைக்கும் எங்கள் மேல்......

மூன்ரும் பிரிவு

"நீங்கள் இங்கே தங்கி என்னுடன் விழித்திருங்கள்."

தியானி : பூங்காவனத்தில் இராயப்பரையும், இயாகப்பரையும், அருளப்பரையும் பார்த்து "நீங்கள் எங்கே தங்கி என்னுடன் விழித்திருப்பீர்களாக' என்று சொன்ன நமது ஆண்டவர் நம்மை நோக்கி அதே வார்த்தைகளை இப்பொழுது கூறுகிருர். முன்னுல் இராஜதீர்க்கதரிசி மூலமாய் "எனக்காக யாதொருவன் பரிதாபப்படுவான்என்று காத்துக்கொண்டிருந்தேன் ; ஒருவருமில்லை ! யாதொருவன் என்னைத் தேற்றுவான் என்று பார்த்தேன்; ஒருவரையும்காணேன்!" என்று நமது ஆண்டவர் சொல்லியிருக்கிருர்.

நீங்களாவது, என்மக்களே, என்னுடன் விழித்திருங்கள். விழித்திருந்து, நான் படும் அவஸ்தையைப் பாருங்கள்...நீங்கள் கஸ்தி அனுபவிக்கையில் என்னைப்போல் செபிக்க வேண்டும் என்று கற்றுக்கொள்ளுங்கள்...

என்னுடன் உங்கள் வேதனைகளைச் சகித்து என்னுடன் செபித்தால், துயரடைந்த எனது இருதயத்துக்கு ஆறுதல் அளித்தவர்களாவீர்கள்...

சோதித்துப்பார்: கிறீஸ்துநாதர் நம்மைப் பார்த்து "நீங்கள் இங்கே தங்கி என்னுடன் விழித்திருங்கள்" என்று கேட்பாரானால், அவர் குரல் கேட்டும் கேளாதவர்கள்போல் இருத்தல் தகாது...அவர் துயரப்படும் நேரத்தில் அவருடன் விழித்திருந்து அவரைத் தேற்றக் கிடைப்பது பெரிய மகிமையென நினைப்போமாக...

உறுதிப்பாடு
முத: பொறுத்தருளும் கர்த்தாவே......

எல்: என்றென்றைக்கும்......

கருணாம்பர சேசுவே, ஆத்துமங்களை நேசிக்கிறவரே, தேவரீருடைய திவ்விய இருதயமானது பூங்காவனத்திலும் சிலுவையிலும் பட்ட மரண அவஸ்தையையும் தேவரீ

ருடைய திருத்தாயார் அனுபவித்த வியாகுலங்களையும் பார்த்து இன்றுதானே பூமியிலெங்கும் அவஸ்தையாய்க் கிடந்து சாகப் போகிற பாவிகளைத் தேவரீருடைய திரு இரத்தத்தினாலே சுத்திபண்ணியருளும்.

அவஸ்தைப்பட்ட சேசுக்கிறீஸ்து நாதருடைய திருஇருதயமே, இன்று மரிக்கிறவர்கள் மேல் இரக்கமாயிரும்.

இரண்டாம் கால் மணி

கிறீஸ்துநாதர் தரையில் முகங்குப்புற விழுந்து கிடப்பதைப் பார்ப்பதாக உருபீகரித்துக்கொள்......

ஆண்டவரே, உமது துயரத்தின் மிகுதியை அறியவும் நான் தேவ சித்தத்துக்குப் பணிந்து நடக்கவும் உதவிசெய்வீராக.

பிறகு அவர் சற்று அப்பால் போய் முகங்குப்புற விழுந்து "என் பிதாவே, கூடுமாகில் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு அகலக்கடவது" என்று வேண்டிக்கொண்டார்.

தியானி : ஆண்டவர் முகம் குப்புற விழு கிறார். ஏனெனில் முதலாவது, அவரது துய ரம் அளவிட முடியாதது. இரண்டாவது, சர் வேசுரனை நோக்கிச் செபிக்கையில் மிகுந்த தாழ்ச்சி வணக்கத்தோடே இருக்க வேண்டும் என்று நமக்குப் படிப்பிக்கச் சித்தமானார். மூன்றாவது, அவரைக் தரையில் விழப் பண் ணிய நமது பாவக்கிரமங்களின் கொடுமையை நாம் அறிய வேண்டுமென்று விரும்பினார்... நான்காவது, மனிதர்களின் பாவாக் கிரமங் களைத் தம்மேல் போட்டுக்கொண்டு மானிட ரின் பாவங்களுக்கு இவ்விதம் பிராயச் சித் தப் பலியாகத் தம்மை முழுவதும் கொடுக்கச் சித்தமானார்...

" பிதாவே, கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு அகலக் கடவது" பாடுகளின் கசப்பான பாத்திரம் அவர் கண் முன் நின் றது...அதன் ஒவ்வொரு துளியையும் குடித் தாக வேண்டும். அந்த ஒவ்வொரு துளியும் எவ்வளவு கசப்பானது என்று அவர் அறி

வார். மனிதருக்காக இவ்வளவு கொடிய வேதனைப் பட்டும் எத்தனை பேர் தங்களுக்காகச் சிந்தப்பட்ட இரத்தத்தை வேண்டாமென்று மிதித்துத் தள்ளுவார்கள்...இவை யாவற்றையும் சேசு அறிந்தார்...

"பிதாவே கூடுமாகில் இந்தப் பாத்திரம் என்னை விட்டு அகலக் கடவது,"

சோதித்துப்பார்: கிறீஸ்துநாதர் உனக்கு இவ்வித பாத்திரத்தைக் கொடுத்து, அதை அவருடன் பருகும்படி உன்னை அன்புடன் அழைப்பதுண்டு......உனக்கு அனுப்பும் சிலுவையாகிய துன்ப துரிதங்களை அவருடன் சேர்ந்து பொறுமையுடன் சகிப்பாயானால் நீ அப்பாத்திரத்தில் அவருடன் பருகுகிறாய்...இராஜ தீர்க்கதரிசியுடன் சேர்ந்து "இரட்சணியத்தின் பாத்திரத்தை வாங்கிக் கொள்வேன்" (சங்: 115.) என்று சொல்லி, அவ்விதம் வாங்குவதற்கான பலம் உனக்குக் கிடைக்கும்படி "ஆண்டவருடைய திரு

நாமத்தை வேண்டிக்கொள்வேன்" (சங். 115) என்று சொல்லுவாயாக.

செபம்: துன்பதுரிதங்கள் உன்னை அடுத்து வரும் பொழுது, நான் உம்மை மனநோகச் செய்யாதபடி, ஆண்டவரே, உமது வல்லமையானது என்னைப் பலப்படுத்தக் கடவது. தேவ நேசத்தை என் இருதயத்தில் எழுப்பியருளும், உமது ஞானத்தை எனக்குக் கொடுப்பீராக.

மும் முறை } முத. பொறுத்தருளும் கர்த்தாவே...
எல். என்றென்றைக்கும்...

என் சர்வேசுரா, இத்தினம் மரண அவஸ்தைப்பட்டு சாகப்போகிற பாவிகளுக்காக உலகினெத்திசையிலும் இன்றைக்குச் செய்யப்படுகிற திவ்ய பலி பூசைகள் அனைத்தையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். சேசு இரட்சகருடைய விலை மதிக்கப்படாத திரு இரத்தம் அவர்களுக்கு இரக்கத்தை அடைந்து கொடுக்கக் கடவதாக.

இரண்டாம் பிரிவு

"ஆகிலும் என் மனதின் படியல்ல, உமது சித்தத்தின்படியே ஆகட்டும்"

நியானி: பிதாவே, நான் இந்தக் கசப்பான பாத்திரத்தைக் குடியாமல் மனிதர் இரட்சிக்கப்பட நீர் சித்தம் கொள்வீராகில் என்னை இப்பாடுகளினின்றும் கொடிய மரணத்தினின்றும் காப்பாற்றும். ஆகிலும், பிதாவே, எனது மனித சுபாவத்துக்கு இயற்கையாயுள்ள விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்தாதேயும். உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது.

சோதித்துப்பார்: கஸ்தி துன்பங்கள் உன்னைச் சூழ்கையில்...எங்கும் இருள் அடர்ந்திருப்பதாகத் தோன்றும் பொழுது,...மனிதராலும், சர்வேசுரனாலும் முதலாய் உன்னைக் கரையேற்ற முடியாது என்று சொல்ல வேண்டிய நிலையில் இருப்பதாக நீ நினைத்தாலும்..., "சர்வேசுரா என் மனதின்படியல்ல, உமது சித்தத்தின் படியே ஆகட்டும்,"

"ஆண்டவரே, நீர் என்னை நேசிக்கிறீர் என நான் அறிவேன்" என்று திரும்பத் திரும்பச் சொல்லுவாயாக... முழு இருதயத்துடன் இவ்விதம் சொல்லுவது கஷ்டமாயிருந்தால் வாயாலென்கிலும் திரும்பத் திரும்பச்சொல்...

செபம்: ஆண்டவரே, சகலத்திலும் உமது திருச்சித்தப்பிரகாரம் நடப்பதற்கான தைரியம் திடத்தை எனக்குத் தந்தருளும்.

மூன்றுறை { முத. பொறுத்தருளும் கர்த்தாவே...
{ எல். என்றென்றைக்கும்...

திருப்பாடுகளைப்பற்றி சேசுநாதருடைய திரு இருதயத்தின் பிரார்த்தனை

சுவாமி, கிருபையாயிரும்.
கிறீஸ்துவே, கிருபையாயிரும்.
சுவாமி, கிருபையாயிரும்.

கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையை நன்ருகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சர்வேசுரா, எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனுகிய சர்வேசுரா, எங்களை......

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா, எங்களை......

அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா, எங்களை......

எங்களுக்காக வெகு பாடுபட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை......

உமது மாதாவின் வியாகுலத்தைப் பார்த்துத் துக்கப்பட்டுப் பிரலாபித்த சேசுவின் திரு இருதயமே, எங்களை......

வியாகுலத்தால் ஊடுருவப்பட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை......

சிலுவையின் ஞானஸ்நானம் பெற விருப்பம் கொண்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை......

துன்பத்தாலும் வியாகுலத்தாலும் பூரணமாய் நிரப்பப்பட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை......

மனக்கலக்கத்தின் ஊற்றாகிய சேசுவின் திரு இருதயமே, எங்களை......

பூங்காவனத்தில் பிடிபட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை......

மரண சஞ்சலப்பட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை......

யூதாஸ் என்பவனால் காட்டிக்கொடுக்கப்பட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை...

அப்போஸ்தலர்களால் கைவிடப்பட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை......

சம்மனசுக்களால் ஆதரிக்கப்பட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை......

அவஸ்தை வேதனையில் அமிழ்ந்தி இருந்த சேசுவின் திரு இருதயமே, எங்களை......

உமது பிதாவினுடைய சட்டத்துக்கு கீழ்ப்படிந்திருந்த சேசுவின் திரு இருதயமே, எங்களை......

சிநேகத்தால் வசீகரம் செய்யப்பட்ட சேசு வின் திரு இருதயமே, எங்களை......

சகல கொடுங்கோன்மைக்கும் உட்பட்ட சேசுவின் திரு இருதயமே. எங்களை......

உமது பகைவனுடைய மூர்க்கத்துக்கு உள்ளாகிச் சோர்ந்த சேசுவின் திரு இருதயமே, எங்களை......

ஈட்டியால் விலா குத்தித் திறக்கப்பட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை.....

கசையால் தசை கிழிய அடிபட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை......

முண்முடியால் சிரசில் அழுத்தப்பட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை......

ஆணிகளால் ஊடுருவித் தைக்கப்பட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை.....

அவதூறுகளால் நிரப்பப்பட்ட சேசுவின் திரு இருதயமே, எங்களை.....

வியாதிக்காரர்களுக்குத் தேற்றரவாகிய சேசுவின் திரு இருதயமே, எங்களை.....

உமது பேரில் பக்தியுள்ளவர்களுக்கு ஆறு

தலாகிய சேசுவின் திரு இருதயமே, எங்களை......

துன்பத்தில் மதுரமாகிய சேசுவின் திரு இருதயமே, எங்களை......

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே, எங்கள பாவங்களைப் போக்கியருளும் சுவாமி.

உலகத்தின்..................எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி.

உலகத்தின்..................எங்களைத் தயை பண்ணி இரட்சியும் சுவாமி.

முதலோதி: உமது பாடுகளுக்கு நாங்கள் பங்காளிகளாயிருக்கக்கடவோம்.

துணைவர்: உமது மகிமையில் நாங்கள் பங்கு பெறக்கிருபைசெய்தருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

மனிதன் படவேண்டிய துன்பதுயரத்தை மிகவாய் அனுபவித்த ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்து நாதரே, நித்திய பிதாவோடும் இஸ்

பிரீத்து சாந்துவோடும் நித்திய காலம் ஜிவித்து ஆண்டு வருபவரே, நீர் பட்ட கொடிய உபாதைகளில் பலனால் நாங்கள் இந்த உலக ஆசாபாசத்தையும் சரீரத்தையும் வெறுத்து உமது பரிசுத்த இருதயத்தின் பாதையை நாடி, இவ்வுலக துன்ப துயரங் களைச் சகித்து, நித்திய காலம் உமது மகிமை யை அடைந்திருக்க எங்களுக்குத் தயை செய் தருளும் சுவாமி. ஆமென் சேசு.

மூன்றும் பிரிவு

“ஆதலால், அவர் அவர்களைவிட்டு மறு படியும் போய் மூன்றும் முறையும் அதே வாக்கியத்தைத்தானே சொல்லி வேண்டிக் கொண்டார்.

தியானி: மூன்றும் முறையாக வேண்டிக் கொண்டார்.

ஏனென்றால், முதலாவது, தமது துயரப் பெருக்கைக் காண்பிக்கச் சித்தமானார். இரண்டாவது, விடாமுயற்சியுடன் திரும்பத்

திரும்பச் செபிக்கவேண்டுமென்று நமக்குக் கற்பிக்க விரும்பினார்...கிறீஸ்தநாதருடைய செபத்துக்கே முதல் தடவையும், இரண்டாவது தடவையும் பரமபிதா பதில் தரவில்லையானால் நமது செபங்களுக்கு உடனே பதில் கிடையாதிருப்பது அதிசயமல்ல...

"அதே வார்த்தைகளைச் சொல்லி வேண்டிக்கொண்டார்." செபிக்க முடியவில்லையே, செபம் செய்வது கடினமாய் இருக்கிறதே என்று சிலர் முறையிடுவதுண்டு...நம் இருதயத்தில் பக்தி உண்டாக்கக்கூடிய அதே வார்த்தைகளைச் சொல்லி வேண்டிக்கொள்வது யாருக்கும் கடினமாயிருக்காது. ஆழ்ந்து தியானிப்பது கடினமாயிருக்கலாம். அதே வார்த்தைகளைச் சொல்லி, அதே விண்ணப்பத்தைத் திரும்ப திரும்பத் ஆண்டவர் பாதத்திற் சமர்ப்பிப்பது கடினமல்ல...

சோதித்துப்பார்: கிறீஸ்துநாதர் ஜெத்செமனி தோட்டத்தில் கொடிய துயரம் அனுபவித்தார். அதைப் போன்ற துயரத்தை

நமக்கு அவர் கொடுப்பதில்லை. அக்கொடிய துயரத்தின் மத்தியிலும் அவர் விடாது செபித்தார். நேசர்களின் உதவியின்றி தனியாக அத்துயரத்தை அனுபவித்து வெற்றி பெற்ருர். துன்ப துயர நேரத்தில் நீ எவ்விதம் நடந்துகொள்கிருய் என்று சோதித்துப்பார்.

செபம்: ஆண்டவரே, எங்களுக்குச் செபிக்கக் கற்பித்தருளும். ஆண்டவரே, விடாது செபிக்கும் விதத்தை எங்களுக்குக் கற்பித்தருளும். ஆண்டவரே, துன்ப துயரம் எங்களைச் சூழ்ந்திருக்கையிலும் விடாது செபிக்கும்படி எங்களுக்கு உதவி செய்யும்.

மும்முறை { முத. பொறுத்தருளும்......
எல். என்றென்றைக்கும்...

எனக்காக மரண அவஸ்தை அனுபவித்த சேசுவே, உம்மிடமிருந்து நான் பெற்றுக் கொள்ளாதது ஏதாவது என்னிடம் உண்டோ? உமது நேசம் காண்பிக்கும் இனிய

பாதையில் நான் நடக்குற்படி, ஓசேசுவே, எனக்கு தைரியமும் பலமும் தருவீராக. ஆண்டவரே, உம்முடன் ஒன்றிக்கலால் நான் என்ன செய்யக்கூடும்? எனது ஒன்றுமில்லாமையையும் பலவீனத்தையும் நான் அறிந்திருக்கிறேன். ஆதலின், ஆண்டவரே, உமது உதவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும்.

பலமுறை உம்மைக் காயப்படுத்திருக்கும் என் குற்றம் குறைகளை மன்னியும். அடிக்கடி நான் காண்பித்திருக்கும் கோழைத்தனத்தையும், மற்ற எல்லாப் பாவங்களையும், நேச இரட்சகரே, மன்னித்து மறந்தருளும். நீர் அனுபவித்த கொடிய மரண அவஸ்தையும், சிந்தியதிரு இரக்கமும், சகித்த அகோர மரணமும், உம்மை சதா ஆராதிக்கும் நவ விலாசசபை சம்மனசுகளுக்காக அல்ல, ஆனால் உம்மை மறந்து தினந்தினம் அநேக முறை தங்கள் பாவங்களால் உம்மைக் காயப்படுத்திவரும் மனிதருக்காகவே என்பதை

நினைவு கூர்ந்தருளும். ஆகையால், என் நேச சேசுவே, முழு இருதயத்தோடு நான் உமக்கு ஊழியஞ் செய்யும் வரம் தந்தருள வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

மூன்றாம் கால் மணி

கிறீஸ்துநாதர் மரண அவஸ்தை அனுபவிப்பதையும், ஓர் சம்மனசு அவரைத் தேற்றுவதையும் பார்ப்பதாக உருபிகரித்துக் கொள்......

ஆண்டவரே, அந்த சம்மனசானவருடன் சேர்ந்து உமக்கு ஆறுதல் தர வந்திருக்கும் எங்கள் மேல் இரங்கி, உண்மையான ஆறுதல் தரும் வழியை எங்களுக்குக் கற்பித்தருளும்.

"அவரோ அவஸ்தையாகி வெகு நேரம் செபித்தார்."

தியானி : சொற்ப நேரம் செபிக்கிறதற்கே நாம் சோம்பற் படுகிறோம்... சொற்ப அசௌகரியம் ஏற்பட்டதும் செபத்தைவிட்டு விடுகிறோம்....நல்ல சேசுவோ

தமது கொடிய துயரத்தின்போது அதிகமாகச் செபிக்கிறார்....

ஆண்டவர் நமது நல்ல மனதைக் கவனிக் கிறார். துன்ப நேரத்தில் செபிப்பது உனக் குக் கடினமாயிருந்தால், உனது முன் மாதிரி யான திவ்ய சேசுவின் மரண அவஸ்தையை யும் அப்பொழுது அவர் செய்த செபத்தை யும் பற்றி நினைப்பாயாக.......

சோதித்துப்பார்: திருமணி ஆராதனை செய்வது கடினமாயிருந்தாலும், ஆண்டவர் உன்மீது கொண்டிருக்கும் நேசத்துக்காக வாவது, அதைத் தொடர்ந்து செய்து வரு வாயாக. ஆண்டவர் உனக்குச் செய்துள்ள வைகளை யோசித்துப் பார்ப்பாயானால் அவ ருக்காக ஒரு மணி நேரம் விழித்திருந்து காவல் செய்வது கடினமாய்த் தோன்றாது. இவ்விதம் நீ ஆண்டவருக்குக் காவல் செய் தால் உனக்கும் பிற ஆத்துமங்களுக்கும் ஏற் படும் அபார நன்மைகளை உத்தேசித்தேன்

கிலும் திருமணி ஆராதனையைத் தொடர்ந்து நடத்தி வருவாயாக....

செபம்: ஆண்டவரே, உமது மரண அவஸ்தையையும், செபத்தையும் பார்த்து எனது துன்ப வேளையில் உம்முடன் விழித் திருக்கும் வரத்தைக் கொடுத்தருளும்,

முழம் முறை { முத. பொறுத்தருளும்......
எல். என்றென்றைக்கும்......

என் சேசுவே, இன்றைய தினம் உலக மெங்கும் நடைபெறும் திவ்ய பலி பூசைகளு டன் நானும் ஒன்றித்து, உமது நேச இரு தயத்தின் கருத்துகளுக்காக, அவைகளை உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். என் பாவங் களுக்குப் பரிகாரம் செய்யும்படி ஒவ்வொரு பூசையினின்றும் உமது விலைமதிக்கப்படாத திரு இரத்தத்தில் ஒரு துளி எனக்குக் கொடுப்பீராக.

இன்றைய பூசைப் பலிகள் ஒவ்வொன்றின் பலன்களைக் குறித்து என் மன்றாட்டைக் கேட்டு உத்தரிக்கிற ஸ்தல நெருப்பினின்று

ஒரு ஆத்துமத்தைக் கரையேற்றும்; ஒரு பாவி மனந் திரும்பும்படி கிருபை செய்யும்; மரண அவஸ்தையிலிருக்கும் ஒரு பாவிக்கு இரக்கம் காண்பிப்பிராக; உமது நேச இருதயத்தை வெகுவாய்க் கஸ்திப்படுத்தும் சாவான பாவம் ஒன்ருகிலும் தடுக்கப்படும் படி கிருபைபுரிவீராக.

ஆமென்சேசு.

இரண்டாம் பிரிவு

"அவருடைய வியர்வை இரத்தத் துளிகளைப்போல நிலத்தில் விழுந்தது."

தியானி: எனது பாவங்கள்தான் நேச இரட்சகரை இந்தப் பரிதாபமான நிலைக்குக் கொண்டுவந்தன. கொடூர பாவங்களைப் பார்த்து அவர் கொண்ட அருவருப்பு, வர விருந்த பாடுகளைப் பார்த்து அவரது மனித சுபாவம் காண்பித்த சஞ்சலம், இவைகள் யாவும் ஒன்று சேர்ந்து அவர் இரத்த வியர்வை வியர்க்கும்படி செய்தன. அவரது

திரு இரத்தம் துளித் துளியாய் தரையில் விழுந்தது.

சோதித்துப்பார் ; என்மேலுள்ள நேசத்தால் கிறீஸ்துநாதர் இரத்த வியர்வை வியர்க்கையில் நான் எனது பாவங்களுக்குப் பரிகாரம் செய்யாதிருப்பேனோ?....அவரது மகிமைக்காக உழைக்காதிருப்பேனோ?....

செபம் : ஆண்டவரே, எனது ஆத்துமமாகிய திராட்சத் தோட்டத்தை நீரே சிருஷ்டித்தீர். இப்பொழுது அது களைகளும், முட் செடிகளும் நிறையப்பெற்றிருக்கிறது. விலை மதிக்கப்படாத உமது திரு இரத்தத்தால் அத்தோட்டத்திற்கு நீர் தண்ணீர் பாய்ச்சி அதைச் செழிப்பித்திருக்கிறீர். இது உமது அளவறுக்கப்படாத நேசத்தின் அறிகுறியாகும். இப்பெரிய நேசத்துக்குக் கைமாறாக நான் உம்மை எல்லாவற்றிற்கும் மேலாக நேசிப்பேன்.

மும்முறை { முத. பொறுத்தருளும் கர்த்தாவே...
எல். என்றென்றைக்கும்......

திவ்ய சேசுவே, உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஆத்துமங்கள்மேல் இரக்கமாயிரும். தாவீது அரசனின் புத்திரனாகிய சேசுவே, சிலுவைப் பாரத்தால் அதிகரித்த உமது திருக் காயங்களின் கொடிய வேதனைகளைப் பார்த்து உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமங்கள்மேல் இரக்கமாயிரும். சுவாமி தேவரீர் அன்று சிலுவைப் பீடத்தில் பலியாகும் நேரம் பச்சாத்தாபக் கள்ளனுக்கு கிருபை புரிந்ததுபோல, இந்த ஆத்துமங்களின்மேல் இரக்கமாயிருந்து, அவர்களை உமது பிரத்தியட்ச தரிசனையின் பாக்கியத்தில் சேர்த்தருளும் அங்கே சகல அர்ச்சியசிஷ்டவர்களோடும் சம்மனசுக்களோடும் அவர்கள் சதாகாலமும் தேவரீரை வாழ்த்தி ஸ்துதிப்பார்கள்.

உன்னதத்தில் வீற்றிருக்கும் பிதாவே, உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமங்களுக்காக திவ்ய சேசுக்கிறீஸ்துவின் விலைமதியாத திரு இரத்தத்தை உமக்கு

ஒப்புக்கொடுக்கிறேன். சுவாமி, பரிசுத்தரே சர்வ வல்லப பரிசுத்தரே, அர்ச்சயரான பரிசுத்தரே, சுவாமி, எங்கள் மேல் இரக்க மாயிரும். பாவிகளுக்குப் பொறுத்தல் தந்தரு ளும். மரித்த சகல விசுவாசிகளுக்கும் நித்திய இளைப்பாறியைக் கட்டளையிட்டரு ளும்.

ஆமென்சேசு.

மூன்ரும் பிரிவு

"அப்போது பரலோகத்தினின்று ஒரு தேவதூதன் அவருக்குத் தோன்றி அவரைத் தேற்றினுர்."

தியானி: துயர சாகரத்தில் அமிழ்ந்தி யிருந்த நமது இரட்சகருக்குத் தேறுதல் கூறும்படி ஓர் சம்மனசானவர் பரலோகத்தி னின்று இறங்கிவந்தார். அந்த சம்மனசான வருடன் சேர்ந்து இந்த டணி நேரத்தில் நீ நமது நல்ல இரட்சகருக்கு ஆறுதல் சொல்லு கிருய். சம்மனசானவர் அவருக்குச் சொன்ன

தேறுதல் வசனங்கள் என்னவென்று நாம் அறியோம். ஆயினும், பிற்காலத்தில் அநேக ஆயிரம் ஆண்களும் பெண்களும் அவருடைய பாடுகளைப் பக்தியுடன் தியானித்து, அவருடன் விழித்திருந்து, காவல்செய்து அவருடன் அனுதாபப்பட்டு இவ்விதம் அத் திரு இருதயத்துக்கு ஆறுதல் அளிப்பார்கள் என்பதை சம்மனசானவர் நமது ஆண்டவருக்கு நினைப்பூட்டினார் என்று சொல்லலாம்.

சோதித்துப்பார் : ஆண்டவருடைய திரு இருதயத்துக்கு உண்மையான ஆறுதல் கொடுப்பவர்களில் நானும் ஒருவனா?...நித்திய பிதாவின் கோபத்தைத் தணித்து, பாவிகளுக்காக அவருடைய இரக்கத்தைக் கேட்டு மன்றாடவேண்டும் என்பதை திருமணி ஆராதனை செய்யும்பொழுதெல்லாம் என் ஞாபகத்தில் வைத்திருக்கிறேனா?...

செபம் : எனது ஆண்டவராகிய சேசுவே, நல்ல இரட்சகரே, பூங்காவனத்தில் நீர் அவஸ்தை அனுபவிக்கையில் உமக்குத் தேறு

தல் அளித்த சம்மனசுடன் அற்பப் பாவியா கிய நானும் சேர்ந்து உமக்கு ஆறுதல் தரும் படி இத்திருமணி ஆராதனையைத் தக்க வித மாய்ச் செய்வேனாக.

மும் } பொறுத்தருளும் கர்த்தாவே
முறை } என்றென்றைக்கும்...

இதுவரை உம்மை மறுதலித்திருந்தால், ஓ என் சேசுவே, இனிமேலாகவென்கிலும் உம் மைச் சிநேகிப்பேன். இதுவரை உம்மைக் காயப்படுத்தியிருந்தால், நேச சேசுவே, இனி உம்மை நான் மகிமைப்படுத்துவேன். இது வரை உம்மை மனநோகச் செய்திருந்தால் இனிமேலாவது உமக்காக மாத்திரமே ஜீவிப் பேன்...

நான்காம் கால் மணி

"இப்படி ஒரு மணி நேரம் என்னுடன் விழித்திருக்கக் கூடாமற் போயிற்றோ?" என்று கிறீஸ்துநாதர் உன்னைப் பார்த்துச் சொல்வதாக உருபிகரித்துக்கொள்....

ஆண்டவரே, திருமணித் தியானத்தின் நோக்கத்தை நன்குணர்ந்து அதன் பிரகாரம் செய்வதற்கான உதவி கட்டளையிட்டருளும்.

பின்னும் அவர் தம்முடைய சீஷர்களிடத்திற்கு வந்து, அவர்கள் நித்திரை செய்கிறதைக் கண்டு இராயப்பரை நோக்கி, "இப்படி ஒரு மணி நேரம் என்னுடன் விழித்திருக்க உங்களால் கூடாமற் போயிற்றோ?" என்றார்.

தியானி: ஆண்டவர் அவஸ்தைப் படுகிறார். அவருடைய பிரிய சீஷர்கள் முதலாய் அவருடன் அனுதாப்படக்காணோம். இதைப் பார்த்த நேச இரட்சகருடைய இருதயமானது உபாதைப்படுகிறது. நாமும் சில சமயங்களில் நமது அன்பரின் அழைப்புகளைக் கவனியாதிருக்கையில் அவர் நம்மைப்பார்த்து "என்னுடன் ஒரு மணி நேரம் விழித்திருக்க உங்களால் கூடாமற் போயிற்றோ?" என்று கேட்கிறார்.

சோதித்துப்பார் : ஆண்டவர் இவ்விதம் உன்னிடம் முறைப்பாடு கூற நீ காரணமா யிருந்ததுண்டா?... இனிமேலாக எவ்விதம் நடந்துகொள்வாய்?... திருமணித் தியானம் செய்வதால் ஆண்டவரது திரு இருதயத்தின் துயரத்தை எங்ஙனம் சிறந்த விதமாய்த் தணிக்கலாம் என்று யோசித்துப் பார்...

செபம் : எனது நேச இரட்சகரே, உம் முடன் விழித்திருக்க எனக்கு உதவி செய் யும். எனது இருதயத்தை நேசத்தால் நிரப்பி, உம்முடைய துயரத்தைப் பார்த்து அனுதா பப்படும் வரத்தை எனக்குக் கட்டளை யிடுவீ ராக.

மும் } பொறுத்தருளும் கர்த்தாவே...
முறை } என்றென்றைக்கும்...

'திவ்ய இரட்சகராகிய சேசுவே, உமதுமே லுள்ள விசுவாசத்தையும் நேசத்தையும் காண்பிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இங்கு கூடியிருக்கும் உம்முடைய மக்க ளாகிய எங்கள்மேல் உமது கருணைக் கண்

களைத் திருப்புவீராக. எங்களுடைய பிரமாணிக்க குறைவுக்காகவும் பாவிகளின் தோஷ துரோகங்களுக்காகவும் பரிகாரம் செய்ய வந்திருக்கிறோம். எங்கள்மேலும், உம்மைச் சிநேகித்துச் சேவிக்கும் பாக்கியம் பெறாத சகல பாவிகள்மேலும் உமது இரக்கத்தைக் காண்பியும். நாங்கள் உமக்கு முன் செய்யும் இந்த வாக்குத் தத்தங்களை, சேசுவின் திரு இருதயமே, நீர் ஆசீர்வதித்தருளும்.

முதலோதி: உமது தயவை மறந்து உம்மை அசட்டை செய்பவர்களின் சகல குற்றம் குறைகளுக்காகவும்,

துணைவர்: ஆண்டவரே, நாங்கள் உமக்கு ஆறுதல் வருவிப்போம்.

முத: திவ்ய நற்கருணைப் பேழையில் உம்மைத் தனிவாசம் செய்ய விட்டுவிடும் அலட்சியத்திற்காக,

துணை: ஆண்டவரே,...

முத: பாவிகளால் உமக்கு நேரிடும் நிந்தைகளுக்காக,

துணை ; ஆண்டவரே,

முத : நாஸ்திகர் உமது மட்டில் காட்டும் துவேஷத்திற்காக,

துணை : ஆண்டவரே,...

முத : உமக்கு விரோதமாய் சொல்லப் படும் சகல தூஷணங்களுக்காகவும்,

துணை : ஆண்டவரே,...

முத : உமது தெய்வீகத்துக்கு விரோத மாக செய்யப்படும் நிந்தைகளுக்காக,

துணை : ஆண்டவரே,...

முத : உமது சிநேகத்தின் அனுமானமான நற்கருணையை தேவ துரோகத்துடன் உட் கொள்பவர்களின் அக்கிரமத்துக்காக,

துணை : ஆண்டவரே,

முத : உமது சந்நிதானத்தில் அநேகர் நடந்துகொள்ளும் மரியாதையற்ற தன்மைக் கா.

துணை : ஆண்டவரே,

முத : நேசத்தால் நீர் சிந்தும் கண்ணீருக் காக,

துணை : ஆண்டவரே,...

முத : உம்மைச் சிறைப்படுத்தும் உமது அணைகடந்த நேசத்திற்காக,

துணை : ஆண்டவரே,...

முத : உமது சிநேகப் பலிக்காக,

துணை : ஆண்டவரே,...

'எனக்கு ஆறுதலளிப்பவர் உண்டா என வீணாகத்தேடி அலைந்தேன்' என்று பிரலாபிக்கும் திவ்ய சேசுவே, உமது திரு இருதயத்திலிருந்துகிளம்பும் இப்புலம்பலை நினைத்து நாங்கள் கொடுக்கும் இந்தசொற்ப ஆறுதலைக் கையேற்பீராக. இனிமேல் உமக்கு விரோதமான எதையும் செய்யாதிருந்து, சகலத்திலும் உமக்குஉகந்த பிள்ளைகளாகும்படி எங்களுக்கு வேண்டிய அனுக்கிரகப் பிரசாதத்தைத் தந்து கிருபை புரியும். உமது திரு இருதயத்தைக் குறித்தும், பிதாவோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் சதாகாலம் சுயஞ்சீவியராய் இராச்சியபாரம் செய்யும் உமது திரு

இருதயபத்தின் பேராலும் இவ்விசேஷ வரத்தைத் தேவரீரிடமே கேட்கிறோம்.

இரண்டாம் பிரிவு

"நீங்கள் சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து செபம் செய்யுங்கள். மனமானது வேகமுள்ளதுதான். மாம்சமோ துர்ப்பலமுள்ளது" என்றார்.

தியானி: விழித்திருந்து செபியுங்கள். விழித்திருக்கவேண்டும். செபிக்க வேண்டும். சோதனைக்கு உட்படாதிருக்க வேண்டுமானால் விழித்திருந்து செபிக்கவேண்டும். சீஷர்கள் இதை உணரவில்லை. ஆகையால் சோதனை வந்ததும், அதாவது ஆண்டவர் பிடிபட்டபோது, சீஷர்கள் எல்லோரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்.

சோதித்துப்பார்: மனமானது வேகமுள்ளது, மாம்சமோ பலவீனமானது. இப்பலவீனத்தை மேற்கொள்வதற்கான பலத்தைச்

செபத்தின் மூலம் ஆண்டவரிடமிருந்து கேட்கவேண்டும்...

செபம்: எனக்குச் சோதனை துன்பங்கள் வருகையில் நான் உம்மைக் கைவிட்டுவிடாதபடி, அதாவது சோதனைக்கு இணங்கி பாவம் செய்து உம்மை மனம்நோகச் செய்யாதபடி, செபத்தினுல் உம்முடன் தங்கி விழித்திருக்கும் வரத்தை, ஆண்டவரே, எனக்குக் கட்டளையிட்டருளும்.

மும் } பொறுத்தருளும் கர்த்தாவே...
முறை } என்றென்றைக்கும் எங்கள்...

நித்தியபிதாவே, எங்களைச் சுற்றி இருக்கும் அஞ்ஞானிகள்மேல் இரக்கமாயிரும் சுவாமி, இரக்கமாயிரும்.

எங்கள் இரட்சகராகிய சேசுவே, இந்து தேசத்தின் அஞ்ஞானிகளுக்கு உமது இரத்தத்தின் பலனை அளித்தருளும் சுவாமி, அளித்தருளும்.

திவ்ய இஸ்பிரீத்துசாந்துவே, அஞ்ஞான இருளிலிருக்கும் இந்து தேசத்தாருக்கு ஞான

வெளிச்சத்தை அளித்தருளும் சுவாமி, அளித்தருளும்.

சேசுவின் திரு இருதயமே, பாவிகளை மனந்திருப்பும். வியாதியஸ்தர்களைக் காப்பாற்றும். உத்தரிக் கிறஸ்தலத்து பரிசுத்த ஆத்துமங்களை இரட்சியும்.

பாவிகளுக்கு அடைக்கலமே, பாவிகள் மனந் திருப்ப வேண்டிக் கொள்ளும்.

அர்ச். சூசையப்பரே, பாவிகளுக்காக சேசுவை மன்ருடும்.

மூன்ரும் பிரிவு

" பின்னும் அவர் திரும்பி வந்து, அவர்கள் மறுபடியும் நித்திரை செய்யக்கண்டார்."

தியானி : மறுபடியும் நித்திரை செய்கிருர்கள் ! திரும்பத்திரும்ப திவ்ய சேசு அவர்களுடைய அனுதாபத்தை விரும்பிக் கேட்கிருர். அவருடைய மரண அவஸ்தை நேரத்தில் அவர்கள் விழித்திருக்க வேண்டுமென ஆசிக்கிருர். அப்படியிருந்தும் சீஷர்

கள் தூங்குகிறார்கள்! இதைப் பார்த்ததும் அவரது இருதயம் பட்ட துயரத்தை யார் தான் வர்ணிக்கக்கூடும்? அவருடைய கொடியமரண அவஸ்தை நேரத்தில் சொற்ப உதவி கேட்கிறார்: அது முதலாய் மறுக்கப் படுகிறது!...ஓ நம் ஆண்டவரின் இருதயம் அச்சமயத்தில் என்ன பாடு பட்டிருக்கும்!... உற்ற சிநேகிதர்களே உதவி செய்யாதிருக்கி றார்கள்!

சோதித்துப்பார்: ஆண்டவருடைய சீஷர் கள் இவ்விதம் கவலையற்றிருக்கையில் நாமா வது பன் மடங்கு பத்தி நேசங் காண்பித்து இனி சேசுவுடன் தங்கி விழித்திருப்போ மாக...எப்போதாவது நாம் துன்பப் படுகை யில் நம் சிநேகிதர்கள் நம்மைக் கைவிட்டுச் செல்வார்களானால் அச்சமயத்தில் நாம் சேசு வின் துயரத்தைப்பற்றி நினைத்து நமது துய ரத்தை அவரது துயரத்துடன் ஒன்றித்து, சேசுவின் நேசத்துக்காக அதைச் சகிக்கக் கடவோம்...

செபம்: என் நேச ஆண்டவரே, எல்லோரும் உம்மைக் கை விட்டாலும் நான் உம்மைக் கைவிட மாட்டேன் என வாக்களிக்கிறேன். இவ் வாக்குறுதியில் நிலைநிற்கும் வரத்தை எனக்குத் தந்தருளும்.

மும் முறை { பொறுத்தருளும் கர்த்தாவே என்றென்றைக்கும்...

பிரிய சகோதரரே, ஒரு மணி நேரம் நமது நேசருடன் சம்பாஷித்திருந்தோம். அவரை விட்டுப் பிரியும் நேரம் இதோ சமீபித்திருக்கிறது. உலகத்திலுள்ள கோடிக் கணக்கான மக்களில் நம்மைத் தெரிந்தெடுத்து இம் மணி நேரத்தில் நாம் அவருக்கு ஆராதனை செய்யும்படி கிருபை செய்ததற்காகவும், இந்த மணி நேரத்தில் அவர் நமக்குக் கொடுத்துள்ள நல்ல யோசனைகளுக்காகவும், அவருக்கு நாம் மனதார நன்றி செலுத்துவோமாக.

சேசுவே, உம்முடன் கூடி இத்திருமணித் தியானத்தைச் செய்தவர்களுக்கு நீர் வாக்

களித்திருக்கும் திரளான வரப்பிரசாதங் களை நாங்கள் அடைய ஆசிக்கிறோம். நாங் கள் கேட்கும் இம்மன்றாட்டுகளை அளிப்பது உமது திரு இருதயத்துக்கு ஆறுதலும், நிர்ப் பாக்கிய உலகத்தின் மீது நீர் கொண்டுள்ள இரக்கத்துக்கு அறிகுறியுமாகும்.

ஜெத்செமனியின் தேவ தூதரைப்போல், உமக்கு ஆறுதல் அளிக்க வந்திருக்கும் எங் களை நினைவு கூர்ந்தருளும். எங்கள் ஆசை களையும்,...துக்க துயரங்களையும்,...கவலை களையும்,...எங்கள் ஜீவியத்தையுமே, திறக் கப்பட்டிருக்கும் உமது இருதயத்தினுள் வைக்க விடை கொடுப்பீராக.

ஆண்டவரே, எங்கள் கடைசி வேண்டுதலை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயை புரி யும்.

அவஸ்தைப்பட்ட சேசுவின் திரு இரு தயமே, எங்கள் ஆத்துமத்தின் சகல குறை களையும் உமக்கே அறிக்கை யிடுகிறோம்....

சிநேகம் நிறைந்த சேசுவின் திரு இருதயமே, பரதேசிகளாகிய நாங்கள் எங்கள் எதிர்காலத்தையும், அதன் கவலைகளையும், உமக்கே ஒப்புக் கொடுக்கிறோம்...

சேசுவின் மதுர இருதயமே, ஊதாரிகளாகிய நாங்கள் எங்கள் பலவீனத்தையும், உண்மையான மனஸ்தாபத்தையும் உமக்கே கையளிக்கிறோம்...

இரக்கம் நிறை இருதயமே, மனச்சாட்சியின் குத்தலால் உபாதிக்கப்படும் எங்கள் இருதயங்களை உமக்கே தருகிறோம்.

சாந்த குண இருதயமுள்ள சேசுவே, எங்கள் குடும்பங்களின் சமாதானத்தையும், இரட்சணியத்தையும் உமக்கே ஒப்புக் கொடுக்கிறோம்.

மிகுந்த தாழ்ச்சியுள்ள சேசுவின் திரு இருதயமே, உம்மை ஆராதிக்கிற நாங்கள் சற்பிரசாத தேவ திரவிய அனுமானத்தில் உமது சிநேகம் வெற்றியடைய வேண்டுமென விரும்

பும் எங்கள் அபிலாஷையை உமக்கே கை யளிக்கிறோம்.

சற்பிரசாத சேசுவின் திரு இருதயமே, எங்களுக்காக குத்தித் திறக்கப்பட்டு ஜீவிய ஊற்றைத் தந்த திருவிலாக்காயத்தில் சகல இருதயங்களும் ஓர் இளைப்பாற்றி ஸ்தலத் தைக் கண்டடையக் கடவன. அத்திரு இரு தயத்தில் அவைகள் நித்திய காலமும் தங்கி இளைப்பாறும்.